# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஆகஸ்ட் 25, 2024 Weekly E-paper ● August 25, 2024





# ஐந்தாவது ஆண்டில் திராவிடப் பள்ளி!

சுப. வீரபாண்டியன்

## இனி அரசு வேறு ஆர்.எஸ்.எஸ் வேறு இல்லை

மா. உதயகுமார்

## முரண்கள் என்றும் சேராது!

தலையங்கம்

## இயக்கச் செய்திகள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஆகஸ்ட் 25, 2024 Weekly E-paper ● August 25, 2024


## ஐந்தாவது ஆண்டில் திராவிடப் பள்ளி!

**சுப. வீரபாண்டியன்**

வேறு எந்தக் கருத்தியலையும் விட, தமிழ்நாட்டில் திராவிடக் கருத்தியலே மிகக் கூடுதலான தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகிறது!

தமிழின் பெயரால், ஈழத்தின் பெயரால், பட்டியலினத்தவர்களின் பெயரால், திராவிடத்தின் மீது சிலர் தாக்குதல்களை தொடுக்கின்றனர்! நேர் எதிர்க் கருத்தியலான ஆரியமோ அமைதியாய் வேடிக்கை பார்க்கிறது! திராவிடத்திற்கு எந்த ஒரு சரிவு ஏற்பட்டாலும், அதனால் தனக்குத்தான் முழுப்பயனும் வந்தடையும் என்பதை ஆரியம் அறியும்! .

தமிழ் உணர்ச்சியை தமிழ்நாட்டில் வளர்த்தது திராவிடம். ஈழ விடுதலைப் போருக்கு தமிழ் மக்களிடையே ஆதரவை கூட்டியது திராவிடம். சாதியற்ற பாலின சமத்துவம் கொண்ட சமூகமே தன்இலக்கு என அறிவித்தது திராவிடம். ஆனால் இன்று நேர்மாறாகப் பொய்கள் விதைக்கப் படுகின்றன.

என்ன செய்யலாம், எப்படி அடுத்த தலைமுறைக்குத் திராவிடக் கருத்தியலைக் கொண்டு செல்லலாம் என்று சிந்தித்த போதுதான், கொரோனா காலத்தில் திராவிடப் பள்ளி என ஒன்றைத் தொடங்கலாம் என்னும் எண்ணம் ஏற்பட்டது! அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த, இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் 2020 செப்டம்பர் 17 - அய்யா பெரியார் பிறந்த நாளில் இப்பள்ளியைத் தொடக்கி வைத்தார்!

நான்கு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. இந்த நான்கு ஆண்டுகளில், 1695 பேர் திராவிடப் பள்ளியில் படித்து, தேர்வு எழுதி, சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்! திராவிட இயக்கத்தின் வரலாறு, கோட்பாடு, திராவிட இயக்கத்தால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட தாக்கம் ஆகியன, தொடக்க நிலை - முதுநிலை என்ற இரு நிலைகளில் இப்பள்ளியில் கற்பிக்கப்படுகின்றன. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், திராவிட இயக்க ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் என்று பலராலும் எழுதப்படும் பாடங்கள் அஞ்சல் வழியில் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன!

இதோ ஐந்தாம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கிவிட்டது. செப்டம்பர் 20 சேர்க்கைக்கான இறுதி நாள்!

செப்டம்பர் 21 - திருச்சியில், பள்ளியின் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழா நடைபெற இருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் திரு. கனிமொழி, மாண்புமிகு அமைச்சர் கே.என் நேரு, சட்டமன்ற உறுப்பினர் கோ.வி. செழியன் ஆகியோர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்கின்றனர்.

விழாவில் பார்வையாளர்களாகவும், திராவிடப் பள்ளியின் மாணவர்களாகவும் வந்து சேருமாறு உங்கள் அனைவரையும் வரவேற்று, காத்திருக்கிறோம்!


**திராவிடப் பள்ளி ஐந்தாம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை தொடங்கி உள்ளது. திராவிட இயக்க வரலாறு, திராவிட இயக்கத்தின் கோட்பாடு, திராவிட இயக்கத்தின் தாக்கம் பற்றி அறியவும், அடுத்தத் தலைமுறையிடம் கொண்டு சேர்க்கவும் இணைவீர் 'திராவிடப் பள்ளி'**

**தொடர்புக்கு - 9994113558.**

www.dravidapalli.com
https://www.instagram.com/reel/C-xI2N-qSmAZ/?igsh=cnBmNXA0am83eHA=



# இனி அரசு வேறு ஆர்.எஸ்.எஸ் வேறு இல்லை

**மா. உதயகுமார்**

நிர்வாகத்தை மேம்படுத்தவும், புதிய திறமைசாலிகளை முக்கியப் பதவிகளில் புகுத்தவும் பல்வேறு ஒன்றிய அமைச்சகங்களில் இணைச் செயலர், இயக்குநர், துணைச் செயலர் பதவிகளுக்கு 45 நிபுணர்களை நியமிப்பதாக பா.ஜ.க அரசு அறிவித்துள்ளது. இந்த முயற்சி புதிய முன்னோக்குகளையும் சிறப்பு நிபுணத்துவத்தையும் அரசாங்கத்தில் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் இதில் பிற்படுத்தப் பட்டோருக்கும், பட்டியல் ஜாதியினருக்கும், பழங்குடியினருக்கும் இடஒதுக்கீடு அறிவிக்கப் படவில்லை. இடஒதுக்கீட்டை ஒழிக்க ஒருபுறம் தொடர் முயற்சி எடுத்து வந்தாலும், அதுவரையிலும் இடஒதுக்கீட்டை எப்படியெல்லாம் தவிர்க்க முடியுமோ அப்படியெல்லாம் தவிர்த்து வருகிறார்கள்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (யுபிஎஸ்சி) 10 இணைச் செயலாளர் பதவிகள் மற்றும் 35 இயக்குநர்/ துணைச் செயலாளர் பதவிகள் அனைத்தும் ஒப்பந்த அடிப்படையில் பக்கவாட்டு நுழைவு(lateral entry) மூலம் நிரப்பப்படும் என்று விளம்பரம் செய்துள்ளது. இவ்விளம்பரம் தனியார் துறை நிபுணர்களை அரசாங்கப் பணிகளில் இணைத்துக் கொள்ளும் நடைமுறையின் தொடர்ச்சியாகும். இந்த நேரடிப் பணிநியமனங்கள் 2018 ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது.

உள்துறை, நிதி மற்றும் எஃகு அமைச்சகங்களில் இணைச் செயலாளர்கள், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் தகவல் மற்றும் ஒளிபரப்பு போன்ற அமைச்சகங்களில் இயக்குநர்/துணைச் செயலாளர் பதவிகள் இந்த நேரடி நியமனங்கள் மூலம் நிரப்பப்பட இருக்கின்றன.

தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் (என்டிஎம்ஏ) இணைச் செயலாளர் (கொள்கை மற்றும் திட்டம்), இணைச் செயலாளர் (வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள்) மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இணைச் செயலாளர் (செமிகண்டக்டர்கள் மற்றும் எலக்ட்ரானிக்ஸ்) போன்ற பதவிகளை நிரப்ப முயல்கிறது. நிதி அமைச்சகம் மற்றும் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் உள்ளிட்ட மற்ற அமைச்சகங்களிலும் அய்.ஏ.எஸ்களுக்குப் பதிலாக தனியார் துறையிலிருந்து ஆட்கள் நிரப்பப்பட இருக்கிறார்கள்.

35 இயக்குநர்/துணைச் செயலாளர் பதவிகளில், எட்டு பேர் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத் துறையிலும், ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்திலும் கூடுதல் பதவிகளுடன் நிரப்பப்பட இருக்கிறார்கள்.

இந்நியமனங்கள், இந்த அமைச்சகங்களுக்குள் கொள்கை உருவாக்கம் மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

தற்போது, இந்த முறையில் 63 நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன, 35 பேர் தனியார் துறையிலிருந்து வந்தவர்கள். தற்போது இத்திட்டத்தின் கீழ் பல்வேறு அமைச்சகங்களில் 57 அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர்.

ஒன்றிய அரசின் 'அமைச்சகங்களில் உயர் பதவிகளில் நேரடியாக பார்ப்பனர்களை, ஆர்.எஸ். எஸ் காரர்களைப் பணியமர்த்தும் முயற்சி ஒருபுறம் என்றால், அரசுப் பணியாளர்கள் ஆர்.எஸ்.எஸ் இல் சேர்வதற்கான தடை நீக்கப்பட்டது இன்னொரு புறம்.

இனி அரசு வேறு ஆர்எஸ்எஸ் வேறு என்கின்ற கருத்துக்கு இடமில்லாமல் எல்லாம் ஒன்றே என்கின்ற இலக்கை நோக்கி இந்தியா பயணித்துக் கொண்டிருக்கிறது.

அரசு வேலைகளில் இருப்போரை ஆர். எஸ்.எஸ் இல் சேர்க்கவும், ஆர்.எஸ்.எஸ் இல் இருப்பவர்களை அரசு வேலைகளில் சேர்க்கவும் முனைப்புடன் செயல்பட்டுவருகிறது ஒன்றிய பாஜக அரசு.

ஆட்சியில் இருப்பவர்கள் மாறலாம், கட்சிகள் மாறலாம். ஆனால் அரசு இயந்திரம் எப்போதும் பார்ப்பனர்கள் கையிலேயே இருக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிகளே இந்த நேரடி நியமனங்கள்.

இந்தியாவில் இருக்கும் இதரப் பிற்படுத்தப் பட்டோரும்,பட்டியல்ஜாதியினரும்,பழங்குடியினரும், பெண்களும், சிறுபான்மையினரும் பார்ப்பனர்களின் இச்சூழ்ச்சிகளை விளங்கிக் கொள்ள வேண்டும். ஒன்றியத்தில்எந்தக்கட்சி ஆட்சிக்குவந்தாலும்,மண்டல் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி, தன் பதவியை இழந்து சமூக நீதி காத்திட்ட துணிச்சல்மிகு பிரதமர் வி.பி.சிங் போன்ற பிரதமர் கிடைத்தால்தான் இச்சூழ்ச்சிகளை நாம் முறியடிக்க முடியும்.

★ **நாட்டில் அனைத்துத் தரப்பில் இருந்தும் ஏற்பட்ட எதிர்ப்பினால் இப்போதைக்கு இந்தத் திட்டத்தை ரத்து செய்வதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது என்பது இப்போது கிடைத்துள்ள செய்தி.**

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## முரண்கள் என்றும் சேராது!

இந்திய ஒன்றியத்தின் தலைசிறந்த அரசியல் ஆளுமையும், தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வருமான தலைவர் கலைஞர் அவர்களின் 100 ருபாய் நாணயத்தை வெளியிட்டு ஒன்றியப் பாதுகாப்புத் துறைஅமைச்சர் ராஜ்நாத் சிங் உரையாற்றும் போது....

"கலைஞர் கருணாநிதியின் அரசியல் போராட்டங்கள் மிகவும் தீவிரமானவை, துணிச்சல் மிக்கவை. இந்தியாவின் தேசிய ஆளுமை கலைஞர் கருணாநிதி. தமிழ்நாட்டின் எல்லையைக் கடந்து பலதரப் பட்டவர்களைத் தன்பக்கம் ஈர்த்தவர். இந்திய அரசியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர், பண்பாட்டுத் தலைவர். சமூக நீதியை அயராது பரப்பியவர் கலைஞர் கருணாநிதி. கலைஞர் கருணாநிதியின் பொதுநலத் தொண்டால், நாட்டிற்கே நன்மை ஏற்பட்டுள்ளது. கலைஞர் கருணாநிதியின் நாணயத்தை நான் வெளியிடுவது, அவருடைய அர்ப்பணிக்கப் பட்ட வாழ்வுக்கு நான் செலுத்தும் அஞ்சலி." என்று பேசினார்.

உடனே எதிர்கட்சித் தலைவராக இருக்கும் எடப்பாடி பழனிச்சாமி இதை... பாஜக-திமுகவின் கள்ள நட்பு என்றும், இந்தியில் எழுத்து இருக்கிறது என்றும், ராஜ்நாத்சிங்கை ஏன் அழைக்க வேண்டும் என்றும், ராகுல் காந்தியை ஏன் அழைக்கவில்லை என்றுகூட ஒரு கேள்வியையும் கேட்டுத் தன்அறியாமைக் காட்டிக்கொண்டு இருக்கிறார் அவர்.

ஒரு தலைவரின் நினைவைப் போற்றி நாணயம் வெளியிடல் என்பது ஒன்றிய நிதித்துறை அமைச்சகமும், ரிசர்வ் வங்கியும் எடுக்கப்பட வேண்டிய முடிவு. அப்படி எடுத்த முடிவில் இது ஓர் அரசு விழா, கட்சி விழா அல்ல. முன்னாள் முதல்வர் கலைஞருக்கான விழாவில் ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் கலந்து கொண்டு உள்ளார்கள்.

எடப்பாடிக்குக் கழக முன்னணியினர் இதற்கு உரிய விளக்கம் சொல்லி விட்டார்கள். எனவே நமக்கு அந்த வேலை இல்லை.

இந்த நிகழ்வை "கூட்டணி தர்மத்தை மிஞ்சிய நட்பு", என்று கூறி தன் அரசியல் முதிர்வைக் காட்டியுள்ளார் வி.சி.க. தலைவர் திருமாவளவன்.

ஆர். எஸ். எஸ். சித்தாந்தங்களும், திராவிட இயக்கக் கோட்பாடுகளும் நேர்முரணானது, என்றும் சேர முடியாது என்பதைக்கூட உணராமல் பேசக்கூடாது.

"தொட்டனைத் தூறும் மணல் கேணி..." என்ற திருக்குறளைச் சற்று அரசியல் படுத்திப் படிக்க வேண்டும், எடப்பாடியார்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## ஆவடியில் பேரவையின் கருத்தரங்கம்



24-08-2024 அன்று ஆவடியில் நடைபெற்ற 'திராவிட அரசியலும், அறிவியல் தொழில் நுட்பமும்' என்ற கருத்தரங்கில் திராவிட முழக்கம் இதழுக்கு 150 ஆண்டுக் கட்டணம் ரூபாய் 60,000 திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்களிடம் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் பேரவைத் தோழர்கள், ஆவடி மூர்த்தி, மாவட்ட திமுக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் உள்ளிடப் பலர் கலந்து கொண்டார்கள்.

# திராவிட இயக்கத் தமிழர் பேரவை

## பேரவைத் தலைவர் அவர்களின் கோவை நிகழ்ச்சிகள்!

ஆகஸ்ட் 31 காலை 10 மணி:

### திராவிட மாணவர் பயிலரங்கம்

இடம்: லீடர்ஸ் டெஸ்க் மீட்டிங் ஹால்,
கற்பகம் காம்ப்ளக்ஸ் அருகில்,
100 அடி சாலை, கோவை.

தலைமை:
**நெல்லை பாபு**
அமைப்பாளர், திராவிட மாணவர் பேரவை.

தொடக்க உரை:
**நா.கார்த்திக் Ex MLA.,**
திமுக மாநகர் மாவட்டச் செயலாளர்.

கருத்துரை:
**பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன்** அவர்கள்

ஆகஸ்ட் 31 சனி மாலை 06 மணி:

### திராவிட நட்புகளுடன் ஓர் உரையாடல்

இடம்: கணுவாய் - கோவை

தலைமை:
**சிங்கராயர்**
தலைவர் - திராவிட நட்புக்கழகம்

முன்னிலை:
**விஜயராணி,** துணைத் தலைவர்

வரவேற்பு:
**வி.பி.கோவிந்தராசு**

உரை:
**பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன்**
**சிற்பி செல்வராசு**

செப்டம்பர் 01 ஞாயிறு காலை 09 மணி:

### டாக்டர் அனிதா படத்திறப்பு - நினைவேந்தல்

இடம்:
ஆவாரம்பாளையம் - கோவை.

தலைமை:
**நா கார்த்திக்,**
திமுக மாநகர் மாவட்டச் செயலாளர்

வரவேற்பு:
**ஆவை கோபிநாத்,** பேரவை மாநகரச் செயலாளர்.

அனிதா படம் திறந்து நினைவேந்தல் உரை :
**பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன் அவர்கள்**

நன்றி:
**காளப்பட்டி ஜெ பி**
பேரவை மாநகரத் தலைவர்

பகல் 11 மணி:

### ‘என்றும் தமிழர் தலைவர்’
### நூல் அறிமுக விழா

இடம்: லீடர்ஸ் டெஸ்க் மீட்டிங் ஹால்,
கற்பகம் காம்ப்ளக்ஸ் அருகில்,
100 அடி சாலை, கோவை.

தலைமை:
**காசு.நாகராசன்,** துணைப் பொதுச் செயலாளர்

வரவேற்பு:
**வெற்றிச் செல்வன்**

முன்னிலை:
**சூலூர் தேவராஜ்**
**வீரபாண்டி தம்புராசு**

நூல் அறிமுக உரை:
**சிற்பி செல்வராசு**
**சிங்கராயர்**
**புதுவை தீனா**
**சரவணப் பெருமாள்**
**சண்முகவேல் பிரபாகரன்**

நூல் மதிப்புரை:
**பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன்**
**தோழர் ஓவியா**

ஏற்புரை:
**வெ.சந்திரமோகன்,** இந்து தமிழ் திசை

**அனைவரும் வருக!**

ஒருங்கிணைப்பு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை - கோவை.**